மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19-ம் நாள் செவ்வாய்கிழமை

அ.வ.எண். 123/22

பி.சா.2

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: ஜெயசங்கரன் தேதி : 19.08.25
வயது : த/பெ : புலிமுண்டன் சேர்வை
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

<u>19.08.25 குறுக்கு விசாரணை</u>

1. நான் வல்லநாடு கஸ்பாவில் தலையாரியாக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் ஓய்வு பெற்று 14 ஆண்டுகள் ஆகிறது. நான் ஓய்வு பெற்ற பிறகு நான் பணிபுரிந்த அலுவலகத்தில் உள்ள ஆவணங்கள் குறித்து எனக்கு தெரியாது என்றால் என் ஞாபகத்தில் உள்ளவை குறித்து தெரியும். இந்நீதிமன்றத்தில் நான் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மகாராஜன் என்ற நபர் எனக்கு வேண்டியவர் என்பதால் அவர் கேட்டதன் பேரில் சாட்சியம் அளிக்கவந்துள்ளேன்.

2. வழக்கு விபரம் குறித்து எனக்கு தெரியும். யார் யார் மீது வழக்கு போட்டுள்ளார் என்றால் மகாராஜன் மீது அதில் குடியிருக்கும் நபர் வழக்கு போட்டுள்ளார்.(எதில் குடியிருக்கும் நபர் என்று நீதிமன்றம் கேட்டதற்கு 5 வார்டில் குடியிருக்கும் நபர் என்று சாட்சி கூறுகிறார். ). நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் என்ன எழுதி உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் கையெழுத்து போட்டேன் சரியாக படிக்கவில்லை.

3. நான் மகாராஜனின் வழக்கறிஞரிடம் கையெழுத்து செய்து கொடுத்தேனா அல்லது மகாராஜனிடம் கையொப்பம் செய்து கொடுத்தேனா என்றால் மகாராஜனிடம் தான் செய்து கொடுத்தேன். நான் மகாராஜன் குடியிருக்கும் வீடு சம்பந்தமாகதான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வல்லநாட்டில் கற்பகவிநாயகர் கோவில் என்று ஒரு கோவில் உள்ளது என்றால் சரிதான். கற்பகவிநாயகர் கோவில் பக்கத்தில் உள்ள

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.08.19 19:46:08 +0530

பாதாளகரண்டி அம்மன் கோவிலில் மகாராஜன் குடும்பத்தினர் மட்டும் வழிபாடு செய்வார்களா என்றால் கற்பகவிநாயகர் கோவில் பக்கம் பாதாளகரண்டி அம்மன் கோவில் இல்லை. மகாராஜன் வீட்டு பக்கம் உள்ள பாதாளகரண்டி அம்மன் கோவிலில் மகாராஜன் குடும்பத்தினர் மட்டும்தான் வழிபாடு செய்வார்கள்.

4. கற்பகவிநாயகர் கோவில் பக்கம் பாதாளகரண்டி அம்மன் கோவில் இல்லை என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க கைகளில் சர்வே எண்களை எழுதிக்கொண்டு வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் அதனை பார்த்து சாட்சியம் அளிக்கவில்லை. நான் என் கைகளில் சர்வே எண்களை எழுதி அதை நினைவுகூர்ந்து சாட்சியம் அளிக்க முயல்கிறேன் என்றால் சரியல்ல.

5. தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால் சர்வே எண். 751ல் அமைந்துள்ளது. என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் சர்வே எண் 751 என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கூடுதலாக சர்வே எண் குறித்து வேறு எதாவது சொல்லியிருந்தால் அது தவறு என்றால் கூடுதலாக எதுவும் சொல்லவில்லை. நான் வழக்கு சங்கதிகள் பற்றி எதுவும் தெரியாமல் எங்கள் ஊரில் உள்ள ஒரு பெரிய மனிதரின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN

Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.08.19 19:46:13 +0530